நீர்வளத்துறை

அனுப்புநர்
பொறி. ஆ. வசந்தி. பி.இ
செயற்பொறியாளர், நீ.வ.து.,
கோதையாறு வடிநில கோட்டம்,
நாகர்கோவில்

பெறுநர்
திருமதி. ஜெசி புளோரா மற்றும்
ஆலிஸ் பிரேமா,
பொன்னப்பநாடார் நகர்,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

க.எண்: வ.4 / பா - 1- 6/ 891 / 2022 / நாள் : 15/ 11.2022

ஐயா.

பொருள் : பாலம் அமைக்க அனுமதி – சார்பு.

பார்வை : 1. தங்கள் கடித நாள் : 30.05.2022.

2. உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., பழையாறு வடிநில உபகோட்டம், நாகர்கோவில் கடித எண். கோ. 73 B / 3236/ 2022 / நாள் : 14.10.2022.

***** *****

பார்வை 1- ல் கண்ட தங்கள் கடிதத்தில் கேட்டுள்ளபடி **தோவாளை வட்டம், திருப்பதிசாரம் வருவாய்** கிராமம் புல எண்கள் **263/8B,9**–ல் அமைந்துள்ள நிலத்திற்கு செல்வதற்கு பொதுப்பணித்துறைக்கு சொந்தமான **நாச்சியார்புதுகுளம்** தண்ணீர் வரத்து ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க உதவி செயற்பொறியாளர் நீ.வ.து., பழையாறு வடிநில உபகோட்டம், நாகர்கோவில் அவர்கள் பரிந்துரை செய்ததின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது. நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் இவ்வனுமதி திரும்ப பெறப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு வழங்கிய ஆவணங்களின் அடிப்படையில் இவ்வனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாணைகளில் பிற்காலத்தில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவரும் பட்சத்தில் இவ்வனுமதி இரத்து செய்ததாக கருதப்படும். இவ்வனுமதியின் அடிப்படையில் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் அனுமதியின்றி மேற்கொண்டதாக கருதப்படும்.
2. பிற்காலத்தில் மேற்படி பாலம் தொடர்பாக வழக்குகள் ஏதேனும் தொடரப்பட்டு இவ்வனுமதிக்கு எதிராக பெறப்பட்டால் நீதிமன்ற தீர்ப்பு நிலை நிறுத்தப்படுவதுடன் இதனால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு மனுதாரரே பொறுப்பேற்க நேரிடும்.
3. பாலத்தின் நீளம் 2.10 மீட்டருக்கு உள்ளளவு குறையாமலும், அகலம் 7.00 மீட்டருக்கு மிகாமலும் உயரம் கால்வாய் தரைமட்டத்திலிருந்து (sill level) 2.50 மீட்டருக்கு குறையாமலும் கட்டப்பட வேண்டும்.

4. பாலம் வேலை ஆரம்பிக்கும் முன் உதவி பொறியாளர் நீ.வ.து., பாசன பிரிவு, **பூதப்பாண்டி** மற்றும் உதவி செயற்பொறியாளர் நீ.வ.து., பழையாறு வடிநில உபகோட்டம், நாகர்கோவில் ஆகியோருக்கு தகவல் தெரிவித்த பின்னர் இத்துறை பொறியாளர்கள் அனுமதியுடன் கால்வாய் அடைப்புக் காலத்தில் செயலாக்கம் செய்ய வேண்டும்.
5. பாலம் வேலை ஆரம்பிக்கும் முன்னர் குறிப்பிட்ட பகுதியை எல்கை நிர்ணயம் செய்து உதவி பொறியாளரின் ஒப்புதல் பெற்று பின்னர் பணியினை ஆரம்பிக்க வேண்டும். வருவாய்த்துறை மூலம் எல்கை நிர்ணயம் மேற்கொண்ட பின்னர் மனுதாரர் கால்வாயின் கரையில் ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ள கூடாது.
6. பாலம் ஐ.ஆர்.சி. தரத்தின்படி பொதுப்பணித்துறை பொறியாளர்களின் அறிவுரைப்படி கட்டப்பட வேண்டும்.
7. கால்வாயின் திட்ட குறுக்கு வடிவின் பரப்பில் (Designed Section) எந்தவித மாறுபாடும் ஏற்படுத்தி கட்ட கூடாது. மேலும் நீரியல் விபரங்களில் (Hydraulic particulars) எவ்வித மாறுபாடும் ஏற்பட கூடாது.
8. பாலம் கால்வாயில் தண்ணீர் போக்கிற்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் கட்டப்பட வேண்டும்.
9. கால்வாயினுள் தூண்கள் நிறுவவோ, குழாய்கள் அமைக்கவோ கூடாது
10. பாலத்தின் கீழ் குப்பைகள் மற்றும் அடைப்புகள் ஏற்படாதவாறு மனுதாரர் பராமரிக்க வேண்டும். பாலத்தின் கீழ் குப்பைகள் தேங்கி அடைப்புகள் ஏற்படும் பட்சத்தில் பாலம் எவ்வித முன்னறிவிப்பும்மின்றி அகற்றப்படும் மனுதாரர் எவ்வித இழப்பும் கோர இயலாது.
11. நீர் நிலைகளில் கழிவு நீர் கலக்க இப்பாலம் காரணமாக கூடாது.
12. பாலம் தங்கள் சொந்த செலவில் கட்டப்பட்டாலும் தங்களுக்கு சொந்தம் ஆகாது. இத்துறையின் முழுக்கட்டுப்பாட்டில் தான் இருக்கும்.
13. பாலம் கட்டும் போது கால்வாயின் கரைகளுக்கோ கட்டுமானங்களுக்கோ சேதம் ஏற்படக்கூடாது. சேதம் ஏற்பட்டால் அதனை தங்கள் சொந்த செலவில் சரி செய்து தர வேண்டும்.
14. பாலம் கட்டும் போது கால்வாயினுள் விழும் கல், மண் மற்றும் இதரப் பொருட்கள் அனைத்தையும் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
15. பணித்தளத்தில் மீதமுள்ள ம5ச்ணை கரையில் போட்டு பலப்படுத்த வேண்டுமே தவிர பணிதளத்திற்கு வெளியே கொண்டு செல்லகூடாது.
16. பணி முடிவுற்ற பின்னர் பணிதளத்திலுள்ள மீதமுள்ள பணிகளின் பொருட்களை முழுமையாக அகற்றம் செய்யப்படவேண்டும்.
17. பிற்காலத்தில் கால்வாய் முன்னேற்ற பணிகளுக்கு மேற்படி பாலம் இடையூறாக இருப்பின் இப்பாலத்தை அகற்ற இத்துறைக்கு உரிமை உண்டு. அவ்வாறு அகறறப்படும் போது மனுதாரர் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இயலாது.

18. பாலத்தின் குறுக்கே வாயிற்கதவுகள் (Gates) எதுவும் நிறுவ கூடாது. மேலும் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு எவ்வித தடுப்போ இடையூறோ ஏற்படுத்தக் கூடாது.
19. பாலம் கட்டப்பட்டு போக்குவரத்து மேற்கொள்ளும் போது கால்வாய் கரைகளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படின் அதற்கு மனுதாரரே முழு பொறுப்பேற்க நேரிடும்.
20. இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. முழு இழப்பீடுகளுக்கும் மனுதாரரே பொறுப்பாவார்.
21. பாலம் கட்டி முடித்து உபயோகத்திலுள்ளபோதோ அல்லது கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் போதோ கட்டுமான பணிகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக விபத்துக்கள் ஏதேனும் ஏற்படடால் அதற்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
22. பாலம் கட்டி முடித்து உபயோகத்திலுள்ளபோதோ அல்லது கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் போதோ கட்டுமான பணிகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக விபத்துக்கள் ஏதேனும் ஏற்படடால் அதற்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

(ஒம்) **x x x**
செயற்பொறியாளர் நீவது.,
கோதையாறு வடிநிலக் கோட்டம்,
நாகர்கோவில்

/ உ.ந..உ.அ./

முதுநிலை வரைதொழில் அலுவலர்